
# இலட்சுமி தீபம்





அமரர்

திருமதி. விஸ்வநாதன் இலட்சுமி அம்மா

அவர்களின்

நினைவு வெளியீடு

07.07.2010

உ

சிவமயம்







# சமர்ப்பணம்

அன்பினைச் சொரிந்து

பாசமுற வளர்த்து

நேசமுடன் நல்வழி காட்டி

வேண்டுவன வெல்லாம் தந்து

எம் குடும்பம் சிறந்தோங்க

எமை ஆளாக்கி அழகு பார்த்த

எங்கள் அன்புத் தெய்வத்தின்

திருப்பாதங்களுக்கு இம் மலர்

சமர்ப்பணம்

**இவ்வண்ணம்**
குடும்பத்தினர்

உ

சிவமயம்



## அமரர்

## திருமதி. விஸ்வநாதன் இலட்சுமி அம்மா

அவர்கள்

தோற்றம்
01-01-1922

மறைவு
07-06-2010

### திதி வெண்பா

சீர்மேவு ஆண்டு விகிர்த்தி அபரபக்க ஏகாதசித் திதியில்
அருள்மேவும் வைகாசித்திங்கள் இருபத்து நான்காம் நாள்—திங்கள்வாரம்
அளவையம்பதி விஸ்வநாதன் இலட்சுமிஅம்மா
பேறான பரமனடி சேர்ந்தார் தாமே

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

பொன்னார் மேனியனே! புலித் தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை அணிந்தவனே!
மன்னே! மா மணியே! மழபாடி உள் மாணிக்கமே!
அன்னே! உன்னை அல்லால் இனி ஆரை நினைக்கேனே.

## திருவாசகம்

அம்மையே! அப்பா! ஒப்(பு) இலா மணியே!
அன்பினில் விளைந்த ஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்(து) அலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே.

## திருவிசைப்பா

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே!
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்(து) அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்(து) உரைக்கேன்
ஆண்ட நீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்(று) அருள் புரியாயே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க, மலிவளம் சுரக்க, மன்னன்
கோன்முறை அரசு செய்க, குறைவிலா(து) உயிர்கள் வாழ்க,
நான்மறை அறங்கள் ஓங்க, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



## ஸ்ரீ கும்பழாவளை விநாயகர் போற்றித் திருப்பதிகம்

1. மலைதங்கு பசுபதியும் வரதபர மேஸ்வரியும்
மகிழவரு திருமைந்தனே
நிலைதங்கு பாசமுட னங்குசம் கொண்டருளும்
நீண்ட தும்பிக்கையனே
அலைதங்கு வாழ்விலே நலமெய்த நினதுதிரு
வடிபேணு மன்புதருவாய்
கலைதங்கு பதியளவைக் கும்பழாவளை திகழ்
கணேசனே போற்றி போற்றி

2. பேர்பொலியும் வேதமுட னாகமவளந்தரும்
பிரணவா போற்றி அடியார்
சீர்பொலியும் நெஞ்சிலுறை சீலனே போற்றிநம்
செல்வனே போற்றி நினது
தார்பொலியும் மெஞ்ஞான சரணகம லாலயத்
தவப்பணி இயற்ற வருள்வாய்
கார்பொலியும் தண்ணளவைக் கும்பழாவளை திகழ்
கணேசனே போற்றி போற்றி

3. மதிபூத்த செஞ்சடையன் வருதே ரிறுத்தவா
வரதனே விக்கினேசா
துதிபூத்த குறுமுனி துரத்துமோர் சிறுவனெனத்
தோன்றுமைங் கரநாதனே
விதிபூத்த எங்கள் வினைத் தளைநீக்க நின்பதும
விரைபூத்த கருணை புரிவாய்
கதிபூத்த பொன்னளவைக் கும்பாழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி

4. காவேரி தந்துசீர் காழியூர் காத்தவா
   கணபதீச் சுரந்தந்தவா
பாவேறு மௌவையின் பண்டமிழ் சுவைத்தவா
   பழம்வாங்க வலம்வந்தவா
சாவேறு பலகோடி செனனதொகைக் களைதீர்க்கும்
   தனிமுதல்வன் நீயல்லவோ
காவேறு வளவளவைக் கும்பழா வளைதிகழ்
   கணேசனே போற்றி போற்றி

5. தருணமழை யேஎங்கள் தவவடிவ மேவேத
   தத்துவச் சிவமாகிய
அருணனெழு சிகரமே ஆறங்க வாழியே
   ஆகம் பரந்த நதியே
மருணெறி கிடக்குமெம திருள்வலை யறுத்துனது
   மலரடி கிடக்க அருள்வாய்
கருணைமிகு கவினளவைக் கும்பழா வளைதிகழ்
   கணேசனே போற்றி போற்றி

6. ஒவியந் தருகின்ற ஓங்கார வட்டத்துள்
   ஒளி யொலிவிளங்கு கலையே
நாவிளங் கும்சர்வ ஞானவட் சரகோண
   நாதனாய் நின்ற பொருளே
பாவிளங் கும்செல்வ பாதபங் கயமலரைப்
   பற்றுதவம் முற்றிவருமோ
காவியம் புகழளவைக் கும்பழா வளைதிகழ்
   கணேசனே போற்றி போற்றி

7. தமிழ்மலரும் திருமுறைகள் தலைகாட்ட வழிகாட்டும்
   சார்நாரை யூரப்பனே
குமிழ் முலைக் குறமாது குமரனை மணம்புரியக்
   கூவிவரு மொருயானையே
உமிழ்கனற் சினவிழிக் காலனெமை யணுகாமல்

உற்றதுணையாக வருவாய்
கமழ்பழப் பொழிலழவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி

8. சந்ததிச் செல்வமும் சால்புநிறை கல்வியும்
சௌபாக்ய மனை வாழ்க்கையும்
சுந்தரத் தேகமும் சுகமான யோகமும்
தூயசிவ நெறி ஞானமும்
வந்தபட் டம்பதவி விருதுகளு முனதுவிழி
மலராது கைகூடுமோ
தந்தமிகு மிளிரவைக் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி

9. திடமுடைய வாழ்வுநீ சிவலோக மூர்த்திநீ
சிந்தனை நயந்தகனி நீ
உடமைநீ உறவுநீ உவந்துபெற் றவரும் நீ
உணர்வாகி நின்ற உயிர்நீ
மடமைக ளொழிப்பவன் நீயேயென் றுனைநம்பி
வாழ்கிறேன் எமை வளர்க்கும்
கடவுளே அளவையூர்க் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி

10. சிற்பரா னந்தனே திருநடன பாதனே
தேடுசகஸ் ராரவெளியின்
தற்பரா, சாயுச்ச சமரச் சுயாதீன
சங்கர மகாதேவனே
அற்புதா வல்லபைக் குரியமண வாளனே
அடியேமை வந்து காப்பாய்
கற்பகா அளவையூர்க் கும்பழா வளைதிகழ்
கணேசனே போற்றி போற்றி

*–அருட்கவி சீ. வி*

# கும்பழாவளை விநாயகர் ஆலய
## அன்புத் திருப்புகழ்

1. விம்ப வாசைகட் கயர்வாகி
வெம்பு நோய்களுற் றலையாதே
எம்பி ரானுனைக் கவிபாடி
இம்ப ரேதொழத் துணைதாராய்
நம்பு வார்மனத் துறைவோனே
நம்பி பூசனைக் கினியோனே
கொம்ப னேகுணக் கிரியானே
கும்பழாவளைப் பெருமாளே

2. உரையிறந்த மாபமூடிய மயலாலே
உரவுகொண்டு மோதினிமீதினி லடிநாயேன்
திரைபரந்த வாழியிலேசுழல் பதராகி
சிரமனந்த வேதனையேகொள விடலாமே
விரைமலர்ந்த வேணியனேதமி ழருளாளா
விரைவுகொண்ட ராகமதேயுறை கணநாதா
வரைவளர்ந்த மாதவபூரணி தருபாலா
மருவுகும்ப ழாவளை மேவிய பெருமாளே

3. வளருத் தெங்கு பாலவ றேன்பழ வகைபாகு
மனது பூத்தன்பு மாலைக ளேகொடு பணிவேனே
தளரு நோய்ப்பந்த மாயவிடாவிட ரலை ஒய
தரளநேர்க்கொம்பி னாலெததூழ்வினை களைவாயே
இளையவேற்றம்பி வாவெனமாபுன மணைவோனே
எழுது கோற்கொண்டு பாரதமேருவி லணிவோனே
அளவி னீர்க்கும்ப மாமுனிதேடிய சிறுபாலா
அளவை யூர்க்கும்ப ழாவளை மேவிய பெருமாளே.

*–அருட்கவி சீ. வி*

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளத்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குஸ நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே,
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி,
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,

குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்ஷமமும்
எண்முக மாக இனிதெனக்கு அருளிப்,

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக் கருளி,
என்னை அறிவித், தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி, என்செவியில்

எல்லை இல்லா ஆனந் தமளித்(து)
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக ! விநாயக! விரைகழல் சரணே!

*விநாயகர் அகவல் முற்றிற்று*

## போற்றித் திருத்தாண்டகம்

## தமிழ் அர்ச்சனைப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமேயாளென்னைக் கொண்டாய் போற்றி
யூற்றாகியுள்ளே யொளித்தாய் போற்றி
யோவாதசத்தத் தொலியே போற்றி
யாற்றாகியங்கே யமர்ந்தாய் போற்றி
யாறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகியெங்குங் கலந்தாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

பிச்சாடல் பேயோடுகந்தாய் போற்றி
பிறவியறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடனன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகமசைத்தாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
யுருவாகியென்னைப் படைத்தாய் போற்றி
யுள்ளாவிவாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம்பரவப்படுவாய் போற்றி
கருவாகியோடு முகிலே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
யூனத்தை நீக்குமுடலே போற்றி
யோங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடலுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஊராகி நின்றவுலகே போற்றி
யோங்கியழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகியெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வாரொருவரையுமில்லாய் போற்றி
காராகிநின்ற முகிலே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

சில்லுருவாய்ச்சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாததேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சிபுணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப்பார் தோறுநின்றாய் போற்றி
பற்றியுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

பண்ணின்னிசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவமறுப்பாய் போற்றி
யெண்ணுமெழுத்துஞ் சொல்லானாய் போற்றி
யென்சிந்தை நீங்காவிரைவா போற்றி
விண்ணு நிலனுந்தீயானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

இமையாதுயிராதிருந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா விறைவா போற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய் போற்றி
யூழியே ழானவொருவா போற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய் போற்றி
யாதிபுராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்றகனலே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

மூவாய் பிறவாய்யிறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதிதேவர் தொழுந்தேவே போற்றி
சென்றேறியெங்கும் பரந்தாய் போற்றி
யாவாவடியேனுக் கெல்லாம் போற்றி
யல்லனலியவலந்தேன் போற்றி
காவாய் கனகத்திரளே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

நெடிய விசும்போடு கண்ணே போற்றி
நீளவகலமுடையாய் போற்றி
யடியு முடியுமிகலி போற்றி
யங்கொன்றறியாமனின்றாய் போற்றி
கொடியவன் கூற்ற முதைத்தாய் போற்றி
கோயிலாவென் சிந்தை கொண்டாய் போற்றி
கடியவுருமொடுமின்னே போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

உண்ணாதுறங்கா திருந்தாய் போற்றி
யோதாதே வேதமுணர்ந்தாய் போற்றி
யெண்ணாவிலங்கைக் கோன்றன்னைப் போற்றி
யிறை விரலால் வைத்துகந்த வீசா போற்றி
பண்ணாரிசையின் சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணாயுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலைமலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

*****



## கொடிக்கவி

### கட்டளைக் கலித்துறை

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று மேலிடில் ஒன் (று)
ஒளிக்கும்; எனினும் இருள் அடராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள தேனும், திரிமலத்தே
குளிக்கு முயிர் அருள் கூடும் படிக் கொடி கட்டினனே!

### நேரிசை வெண்பா

பொருளாம் பொருள் ஏது? போதேது? கண்ணேது?
இருளாம் வெளியே (து)? இர்வே (து) – அருளாளா!
நீ புரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா (து) உணர்வரிய தன்மையனை – நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமருள் நல்கக் கொடி

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் – நெஞ்சமுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையுங்
கூசாமற் காட்டக் கொடி

அந்த மலமறுத்திங் (கு) ஆன்மாவைக்காட்டியதற் (கு)
அந்த அறிவை அறிவித்தங் (கு) – இந்தறிவை
மாறாமல் மாற்றி மருவுசிவப் பேறென்றுங்
கூசாமல் கூறக் கொடி

# மகோற்சவ காலத்தில் ஓதப்படும் பண்கள்

தேவதை : கணபதி　　　　　　　　பண் : தக்கராகம்

வெண்கோவணங் கொண்டொரு வெண்டலையேந்தி
யங்கோர் வளையாளை யோர் பாகமமர்ந்து
பொங்கா வருகாவிரிக் கோலக்கரை மே
லெங்கோனுறை கின்ற விடைமருதீதோ

வடந்திகழ் மென் முலையாளைப் பாகமதாக மதித்துத்
தடந்திரைசேர் புனல்மாதைத் தாழ் சடைவைத்த சதுர
ரிடந்திகழ் முப்புரிநூலர் துன்பமோடின்பம தெல்லாங்
கடந்தவர் காதலில் வாழுங்கற்குடிமாமலையாரே

தேவதை : ரிஷபம்　　　　　　　　பண் : காந்தாரபஞ்சம்

அறையார் கழலும் மழல் வாயரவும்
பிறையார் சடையுமுடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வாயிவளை
யிறையார் வளைகொண்டெழில் வல்வினையே

கலையான் மறையான் கனலேந் துகையான்
மலையாளவன் பாக மகிழ்ந்தபிரான்
கொலையார் சிலையான்குட வாயிறனி
னிலையார் பெருங் கோயினி வாயவனே

தேவதை : பிரம்மா　　　　　　　　பண் : மேகராகக்குறிஞ்சி

வேத்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
　　நெறிகாட்டும் விகிர் தானகிப்
பூந்தாம நறுங் கொன்றை சடைக்கணிந்த
　　புண்ணியனார் நண்ணுங் கோயில்
காந்தாரமிசையமைத்துக் காரிகையார்
　　பண்பாடாக்கவினார் வீதித்
தேந்தா மென்றரங்கேறிச் சேயிழையார்
　　நடமாடுந் திருவையாறே.

பிறப்பாதியில்லான் பிறப்பார்பிறப்புச்
செறப்பாதியந் தஞ்செலச் செயுந்தேசன்
சிறப்பாடுடையார் திருப்பறியலூரில்
விறற்பாரிடஞ் சூழ் வீரட்டத்தானே

தேவதை : இந்திரன் பண் : காந்தாரம்

கங்கைசேர் சடைமுடியீர் காலனை முன்செற்றுகந்தீர்
திங்களோடிள வரவந்திகழ் சென்னிவைத்து கந்தீர்
மங்கையோர் கூறுடையீர் மறையோர் கணிறைந்தேத்தப்
பங்கயஞ்சேர் வேணுபுரம்பதியாகக் கொண்டீரே

ஒதிமண்டலத்தோர் முழுதுய்யவெற்பேறு
சோதிவானவன் றுதி செய மகிழ்ந்தவன் றூநீர்த்
தீதில் பங்கயந்தெரிவையர் முகமலர் தேவூ
ராதி சேவடி யடைந்தன மல்ல லொன்றிலமே

தேவதை : அக்கினி பண் : கொல்லி

போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்தானெனையாண்டவன்
காதையார் குழையினன் கழுமலவளநகர்ப்
பேதையாளவளொடும் பெருந்தகையிருந்ததே

நிறையுடை நெஞ்சுளு நீருளம் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளுங்
கறையுடைமிடற்றண்ணல் கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாற் களைகிலார் குற்றமே

தேவதை : யமன் பண் : கௌசிகம்

கலையினான் மறையான் கதியாகிய
மலையினான் மருவார் புரமூன்றெய்த
சிலையினான் சேர்திரு மழபாடியைத்
தலையினால் வணங் கத்தவமாகுமே

நம்புவார் நமர் நாமவிற்றினால்
வம்பு நாண் மலர்வார் மதுவொப்பது
செம்பொனார் திலதம்முலகுக்கெலா
நம்பனாம நமச்சிவாயவே

தேவதை : நிருதி பண் : நட்டபாடை

அந்தமுமாதியு நான் முகனுமரவணையானுமறிவரிய
மந்திரவேதங்களோ துநாவர் மருகல் நிலாவியமைந்த சொல்லாய்
செந்தமிழோர்கள் பரவியேத் துஞ்சீர்கொள் செங்காட்டங்குடியதனுட்
கந்தமகிற் புகையேகமழுங்கணபதீச்சரங்காமுறவே

வண்டார் குழலரிவை யொடும் பிரியாவகைபாகம்
பெண்டான் மிகவானான் பிறைசென்னிப் பெருமானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடுமாடம்
விண்டாங்குவ போலும் மிகுவேணு புரமதுவே

தேவதை : வருணன் பண் : சீகாமரம்

பேயடையாபிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினை
வாயினவேவரம் பெறுவரையுற வேண்டாவொன்றும்
வேயன தோளுமை பங்கன் வெண்பாட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர் தம்மைத் தோயாவாந்தீவினையே

வேலைமலிதண் கானல்வெண்காட்டின்றிருவடிக்கீழ்
மாலைமலிவண் சாந்தால் வழிபடு நன்மறையவன்றன்
மேலடர் வெங்காலனுயிர்விண்டபினை நமன்றூத
ராலமிடற்றானடியாரென்றடரவஞ்சுவரே

தேவதை : வாயு பண் : தக்கேசி

பங்கமேறுமதிசேர் சடையார் விடையார் பலவேத
மங்கமாறு மறைநான் கவையுமானார் மீனாரும்
வங்கமேவுங் கடல்வாழ் பரதர் மனைக்கே நுனைமூக்கின்
சங்கமேறிமுத்த மீனுஞ் சண்பை நகராரே.

வந்தித்திருக்குமடியார் தங்கள் வருமேல்வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமனுறை கோயில்
முந்தியெழுந் தமுழவினோசைமு தூகல் வரைகள் மே
லந்திப் பிறை வந்தணையுஞ் சாரலண்ணாமலையாரே

தேவதை : குபேரன் பண் : தக்கராகம்

அந்தமுமாதியுமாகிய வண்ண லாரழலங்கையமர்ந்திலங்க
மந்தமுழ வமியம்பமலைகள் காண நின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலை கங்கை தண்மதியம் மயலேததும்ப
வெந்த வெண்ணீறு மெய்பூசும் வேட்களநன்னகராரோ

ஆடலழனாகமரைக்கிட்ட சைத்தாடப்
பாடல்மறைவல்லான் படுதம்பலிபெயர்வான்
மாடமுகட்டின் மேல் மதிதோயதிகையுள்
வேடம்பலவல்லானாடும் வீரட்டானத்தே

தேவதை : ஈசானம் பண் : (சாலாபாணி) சாதாரி

வல்லைவருகாளியை வகுத்து வலியாகுமிகு தாருகனை நீ
கொல்லென விடுத்தருள் புரிந்த சிவன் மேவுமலை கூறிவினவிற்
பல்பலவிருங்கனி பருங்கிமிகவுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்று கருமந்தி விளையாடு காளத்திமலையே

சொற்பிரிவிலா தமறைபாடி நடமாடுவர் தொலானையுரிவை
மற்புரிபுயத்தினி துமேவுல ரெ நாளும் வளர்வானவர் தொழத்
துற் பெரிய நஞ்சமுதமாக முனயின்றவரியன்ற தொருசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர் நகரென்பர் திருவேதிகுடியே



*ஓம் நமோ நாராயணாய*

# திருமால் தோத்திரம்

**திருச்சிற்றம்பலம்**

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்
சேவடி செவ்வித் திருக்காப்பு

பச்சைமா மலைபோல் மேனி பவழவாய் கமலச் செங்கன்
அச்சுதா அமரா் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

ஊரு நீ பேரு நீயும் என் அறிவும் நீ எம்முருவும் நீயும்
மாறு நீ உயிர்களுக்கெல்லாம் படியளப்பவனும் நீயே
தேருள அருளால் உந்தன் திருவடி தாட்கொள்ளும்
ஆருமற்றோர்க்கு நீயே எந்தன் அரங்கமா நகருளானே

அமரவோரங்கமாறும் வேதமோர் நாங்குமோதி
தமர்களில் தலைவராய சாதி அந்தணர்களேலும்
நுமர்களைப் பளிப்பாராகில் நொடிப்பதோரளவிலாங்கே
அவர்கள் தாம் புலையர்போலும் அரங்கமாநகருளானே

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுது யாராயினவெல்லாம் நிலந்தரஞ்செய்யும் நீள்
விசும்பு அருளும் அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா எனும் நாமம்

மஞ்சுலாம் சோலை வண்டு அறை மாணீர்
மங்கையர் வாழ்கலிகன்றி
செஞ்சொலால் எடுத்த தெய்வநல்மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போது அழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதாம் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராயணா எனும் நாமம்

ஊன் ஏறு செல்வத்து உடல்பிறவி யான் வேண்டேன்
ஆண் ஏறு ஏழ் வென்றான் அடிமைத்திறம் அல்லால்
கூன் ஏறு சங்கம் இடத்தான் தன் வேங்கடத்து
கோன் ஏரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.

பின்னிட்ட சடையானும் பிரமனும் இந்திரனும்
துன்னிட்டுப் புகல் அரிய வைகுந்த நீள்வாசல்
மின்வட்டச் சுடர்ஆழி வேங்கடக்கோன் தான் உமிழும்
பொன்வட்டில் பிடித்து உடனே புகழ்பெறுவேன் ஆவேனே

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படையோர் புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

பிறை ஏறு சடையானும் பிரமனும் இந்திரனும்
முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான் மறையானான்
வெறிஆர் தண்சோலைத் திருவேங்கட மலைமேல்
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையேன் ஆவேனே

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே

மன்னிய தண்சாரல் வடவேங்கடத்தான் தன்
பொன் இயலும் சேவடிகள் காண்பான் புரிந்து இறைஞ்சி
கொல் நவிலும் கூர்வேல் குலசேகரன் சொன்ன
பன்னிய நூல் தமிழ் வல்லார் பாங்காய் பக்தர்களே.

அன்பே தகழியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை மிடுதிரியா – நன்புருகி
ஞானச் சுடர்விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்

மானேய் நோக்கி மடவாளை மார்பிற் கொண்டாய் மாதவா
கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா
வானார் சோதி மணிவண்ணா மதுசூதா நீ அருளாய் உன்
தேனே மலருந் திருப்பாதஞ் சேருமாறு வினையேனே

ஆதித் திருக்கோலம் ஆனான் அடியவற்கா
சோதித்திருத்தூணில் தோன்றினான்
வேதத்தின் முன்னின்றான் வேழமுதலே என
அழைப்ப என் னென்றான் எங்கட கிறை

ஆயர் கொழுந்தாய அவரால் புடையுண்ணும்
மாயப்பிரானை என் மாணிக்கச் சோதியைத்
தூய அமுதைப் பருகிப் பருகி என்
மாயப் பிறவி மயர்வறுத்தேன்

திருவாழி சங்கு திரு ஆழி வாழி, சிறந்த கொண்டல்
உரு வாழி யோகத் திருத்துயில் வாழி, உலகு அளந்த
மரு ஆர் மது மலர்தாள் வாழி, வாழி வணங்கும் அன்பர்
பெரு வாழ்வு, அனைய பெருமாள் அரங்கப் பெரும் செல்வமே

சர்வர்த்தர கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா

## திருவாசகத் தேன்துளி

திருச்சிற்றம்பலம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே

*–மெய்யுணர்தல்–* 1

யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதனுக்
கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான்
மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம்
பெருமான்எம்
மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே
வருந்துவனே

2

வருந்துவன்நின் மலர்ப்பாத மவைகாண்பான்
நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத்
தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம்
புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றென்னேநான்
ஆமாறே

3

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே
வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை
ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன்
பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய
வெள்ளத்தே

– *அறிவுறுத்தல்* – 4

சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே

– *சுட்டறுத்தல்* – 5

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வ தொன்றறியேனே

– *ஆத்துமசுத்தி* – 6

அறிவ னேஅமு தேஅடி நாயினேன்
அறுவ னாகக்கொ டோஎனை ஆண்டது?
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோஅல்ல னோஅரு ளீசனே

*– கைம்மாறு கொடுத்தல் –* 7

செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே.

8

உடையா னேநின் றனைஉள்கி
உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேன்நெஞ் சுருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே

9

தேனைப் பாலைக் கன்னலின்
தெளிவை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை
உம்ப ரானை வம்பனேன்
நானின் னடியேன் நீஎன்னை
ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தம்மை யாம்என் றன்மையே

*–அநுபோகசித்தி–* 10

திருச்சிற்றம்பலம்

*கணபதி துணை*

# நித்திய கரும விதி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இயற்றியது

சைவசமய மரபிலே பிறந்தவர் எல்லோரும் ஏழாம் வயசிலாவது, ஒன்பதாம் வயசிலாவது சமய தீக்ஷை பெற்று, அநுட்டானஞ் செவ்வையாகப் பழகிக் கொண்டு, மரண பரியந்தம் விடாது செய்க.

நாடோறுஞ் சூரியோதயத்துக்கு முன்னே நித்திரை விட்டெழுந்து, சிவசிவ என்று நெற்றியில் விபூதி தரித்துக் கணபதியே நம என்று குட்டிக் குருப்பியோ நம என்று கும்பிட்டுச் சிவபெருமானை இதயத்திலே தியானித்து, ஒரு தோத்திரமாவது சொல்லிக் கொள்க.

அதன்பின் எழுந்து, புறத்தேபோய், மலசலமோசனஞ் செய்து, சௌசம் பண்ணித் தந்த சுத்தி செய்து, முகங்கழுவி, நெற்றியில் விபூதி இட்டுக் கொள்க.

நீர் நிலை அடைந்து, ஸ்நானஞ் செய்து, ஈரந்துவட்டி, நெற்றியில் விபூதி இட்டு, உலர்ந்த சுத்த வஸ்தீரந் தரித்துக் கொள்க.

அநுட்டான பாத்திரத்தை வெள்ளையிட்டு அலம்பிச் சுத்த சலம் பூரித்துச் சுத்த பூமியிலே சிறிது சலம் விட்டு அதன் மேற் பாத்திரத்தை வைத்துக் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருந்து விபூதியை இட்டுக் கொண்டு அனுட்டானம் பண்ணுக.

வியாதியினாலே ஸ்நானஞ் செய்ய மாட்டாதவர், கைகால் கழுவி, ஈரவஸ்திரத்தினால் உடம்பெங்குந் துடைத்து, உலர்ந்த சுத்த வஸ்திரத்தினால் ஈரந்துவட்டி, நெற்றியில் விபூதியிட்டு, வேறு உலர்ந்த சுத்த வஸ்திரந் தரித்து, ஆசமனஞ் செய்து கொண்டு, அநுட்டானம் பண்ணுக. அதுவுஞ் செய்யமாட்டாதவர் நெற்றியில் விபூதி இட்டுச் சிவபெருமானைத் தியானித்துச் சிவ மூல மந்திரத்தை மனசிலே சிந்தித்துக் கொண்டு கிடக்க.

வீட்டுக்கு விலக்காயுள்ள பெண்கள் மூன்று நாளுஞ் சிவ மூலமந்திரத்தை மனசிலே சிந்தித்துக் கொண்டு நான்காம் நாள் ஸ்நானஞ் செய்து அநுட்டானம் பண்ணுக.

## மூல மந்திரம்

| | | |
|---|---|---|
| சிவ மூலமந்திரம் | – | நமசிவாய |
| தேவி மூலமந்திரம் | – | உமாதேவ்யை நம |
| விக்கினேசுர மூலமந்திரம் | – | கணபதேய நம |
| சுப்பிரமணிய மூலமந்திரம் | – | சரவணபவாய நம |
| சூரிய மூலமந்திரம் | – | சிவசூர்யாய நம |

## பதினொரு மந்திரம்

ஈசாநாய நம
தற்புருஷாய நம — *இது ஐந்தும்*
அகோராய நம — *பிரம மந்திரம்*
வாமதேவாய நம
சத்தியோசாதாய நம

இருதயாய நம
சிரசே நம
சிகாயை நம — *இது ஆறும்*
கவசாய நம — *அங்க மந்திரம்*
நேத்திரேப்பியா நம
அஸ்திராய நம

## ஆசமன மந்திரம்

ஆத்தும தத்துவாய சுவதா
வித்தியா தத்துவாய சுவதா
சிவ தத்துவாய சுவதா

## அனுட்டான விதி

### பூமி சுத்தி

அஸ்திராய படு என்று தானிருக்கும் பூமியைச் சலத்துளியினாலே தெளிக்க

## கணபதி குருவந்தனம்

கணபதியே நம என்று குட்டி
குருப்பியோ நம என்று கும்பிடுக

## சல சுத்தி

அநுட்டான சலத்தை

நமசிவாய என்று வலக்கைச் சுட்டுவிரல் நடுவிரல்களை உள்ளே மடக்கிப் பெருவிரலுக்கும் அணிவிரலுக்கும் நடுவாக நிரீக்ஷணமும்

அஸ்திராயபடு என்று பெருவிரனுதியையுஞ் சுட்டுவிரனுதியையுஞ் சேர்த்து ஒலியெழுப்புதலினாலே திக்கு பந்தனமும்,

கவசாய வௌஷடு என்று நீட்டிய சுட்டி விரலினாலே அவகுண்டனமுஞ் செய்க.

## ஆசமனம்

ஆத்தும தத்துவாய சுவதா

வித்தியா தத்துவாய சுவதா

சிவ தத்துவாய சுவதா

என்று பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்த சலத்தினால் ஆசமன்மஞ் செய்து

அஸ்திராய படு என்று அதரங்களிரண்டையும் பெருவிரலடி கொண்டு இடமாக இரண்டு தரமும் உள்ளங்கை கொண்டு கீழாக் ஒரு தரமுந்துடைத்துக் கை கழுவி.

இருதயாய வௌஷடு என்று பெருவிரலோடு கூடிய அணி விரலினாலே முகம், வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, தொப்பூழ், மார்பு, வலத்தோள், இடத்தோள், சிரசு என்னும் இப்பன்னிரண்டிடங்களையும் தொட்டு விடுக.

## விபூதி சுத்தி

விபூதியை வலக்கைப் பெருவிரல் நடுவிரல் அணிவிரல்களால் எடுத்து, இடக்கையில் வைத்துக் கொண்டு,

அஸ்திராயபடு என்று விபூதியிலே சலத்தைத் தெளித்து அவ்விபூதியில் ஒரு சிறு பங்கைப் பெருவிரல் அணி விரல்களினாலே தொட்டு,

அஸ்திராய உம் படு என்று இராக்ஷதர் பொருட்டு நிருதி மூலையிலே தெறித்து விபூதியை,

நமசிவாய என்று நிரீக்ஷணமும்

அவுஸ்திராய படு என்று திக்குபந்தனமும்

கவசாய வௌஷடு என்று அவகுண்டனமுஞ் செய்து வலக்கையால் மூடிக்கொண்டு,

ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தாலும் அபிமந்திரிக்க.

## விபூதி ஸ்நானம்

வலக்கையின் பெருவிரல் அணிவிரல்களால் விபூதித்தூளியை எடுத்து,

அஸ்திராய படு என்று தலை தொடங்கிக் காலளவும், பூசி இடக்கையில் உள்ள விபூதியை பெருவிரலோடு கூடிய நடுவிரலினாலே,

இருதயாய நம என்று சலம் விட்டு

கவசாய வௌஷடு என்று குழைத்து,
நடுவிரல் மூன்றினாலும்

ஈசாநாய நம என்று சிரசிலும்,

தற்புருஷாய நம என்று நெற்றிலும்
அகோராய நம என்று மார்பிலும்,

வாமதேவாய நம என்று தொப்பூழிலும்,

சத்தியோசாதாய நம என்று வலமுழந்தாள்,

இடமுழந்தாள், வலப்புயம், இடப்புயம், வலமுழங்கை, இடமுழங்கை, வலமணிக்கட்டு, இடமணிக்கட்டு, வலவிலா, இடவிலா, முதுகு, கழுத்து என்னும் மற்றையிடங்களிலுந் திருபுண்டரமாகத் தரிக்க.

## மந்திர ஸ்நானம்

எஞ்சிய விபூதியோடு கைந்நிறையச் சலம் விட்டுக்கும்ப முத்திரையாகப் பிடித்துக் கொண்டு,

ஈசாநாய நம என்பது முதலிய ஐந்து மந்திரத்தை உச்சரித்துச் சிரசிலே புரோக்ஷித்து விட்டுக் கைகழுவக.

## ஆசமனம்

*முன்போல ஆசனமஞ் செய்க*

## பிராணாயமம்

வலக்கையிற் சுட்டுவிரலையும் நடுவிரலையும் உள்ளே மடக்கிப் பெருவிரலினால் வலமூக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு தாமும் பெருவிரலணி விரல்களினால் வல இடமூக்குகளைப் பிடித்துக் கொண்டு ஒரு தரமும் அணிவிரலினால் இடமூக்கைப் பிடித்துக் கொண்டு இரு தரமுமாக.

ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை மூன்று தரம் உச்சரித்து,

நமசிவாய என்று வலக்காதைப் பொத்துக.

## சிவ தீர்தத் கரணம்

இருதயாய வௌஷடு என்று புருவ நடுவில் உள்ள அமிர்த்தத்தை நுதி வளைந்த சுட்டுவிரலினால் எடுத்துச் சலத்தினிடத்தே வைத்து,

நமசிவாய என்று அபிமந்திரித்து

அஸ்திராய படு என்று திக்குபந்தனம்,

கவசாய வௌஷடு என்று அவகுண்டனமுஞ் செய்க.

## மந்திராபிஷேகம்

வலக்கையினாற் சலத்தை அள்ளி இடக்கையில் விட்டுக் கும்பக முத்திரையாகப் பிடித்துக் கொண்டு,

ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை உச்சரித்துச் சிரசிலே புரோக்ஷிக்க

## மார்ச்சனம்

சலத்தை வலக்கையால மூடி

ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தினால் அபிமந்திரித்து, வலக்கையினாலே சலத்தை எடுத்து, இடக்கையில் விட்டு வைத்துக் கொண்டு, அவ்விடக்கையினின்றுங் கீழே ஒழுகுகின்ற சலத்தை வலக்கையினாலே,

ஈசாநாய வௌஷடு என்று முதலிய பதினொரு மந்திரத்தினாலே சிரசின் மேலே தெளித்துவிடுக.

எஞ்சிய சலத்தை இடக்கையினின்றும் வலக்கையில் விட்டு, மூக்குக்குச் சமீபத்திலே பிடித்துக் கொண்டு அந்தச் சலம் வெண்ணிறமுடைய தரும வடிவமாகி இடமூக்கினாலே உள்ளே புகுந்து அங்குள்ள பாவத்தை அழித்ததாகவும் அந்தப் பாவம் மைக்குழம்புபோல வலமூக்கினாலே புறத்தே நீங்கிக் கையில் வந்ததாகவும் பாவித்து, வலக்காற் பெருவிரலிற் சுவாலிக்கும் அக்கினியிலே அஸ்திராய உம்படு என்று புருவமுரிப்புடனே விட்டு, அந்தப்பாவஞ் சாம்பரானதாப் பாவித்து, அஸ்திராய படு என்று கை கழுவுக.

## ஆசமனம்

*முன்போல ஆசனமஞ் செய்க*

## கவசசேஷ்டணம்

கவசாய வௌஷடு என்று வலக்கையிற் சலத்தினாலே தன்னை வலமாகச் சுற்றுக.

## தருப்பணம்

இரண்டு கையும் நிறைந்த சலத்தினாலே நமசிவாய என்று மூன்று தரங் தருப்பணஞ் செய்து

நமசிவாய என்று பத்துத் தரஞ் செபித்து நமசிவாய என்று மீண்டும் ஒரு தரம் தருப்பணஞ் செய்து

ஈசாநாய சுவாகா என்பது முதலிய பதினொரு மந்திரத்தினால் ஒரு தரம் தருப்பணஞ் செய்து

உமாதேவ்யை சுவாகா என்றும், கணபதியே சுவாகா என்றும், சரவணபவாய சுவாகா என்றும் ஒவ்வொரு தரந் தருப்பணஞ் செய்க.

## ஆசமனம்

*முன்போல ஆசனமஞ் செய்க*

## தீர்த்தோபசங்காரம்

முன்னே சலத்திலே வைத்த அமிர்தத்தை இருதயாய வெளஷடு என்று நுதி வளைந்த சுட்டு விரலினால் எடுத்துப் புருவ நடுவிலே ஒதுக்கி விடுக.

## சூரியோபஸ்தானம்

இரண்டு கைந்நிறையச் சலம் விட்டுப் பிடித்துக் கொண்டு ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை உச்சரித்து,

சிவசூரியாய சுவாகா என்று ஒரு தரந்தருப்பணஞ் செய்க.

அஸ்திராய படு என்று தான் இருக்கும் பூமியைச் சலத்தினாலே புரோக்ஷித்து,

வடக்குமுகமாக ஆசனத்திருந்து, முன்போலக்குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமஞ் செய்து சிவபெருமானுடைய உருவத் திருமேனியாகிய உத்திர வடிவத்தைத் தியானிக்க.

## உருத்திரத்தியானம்

மைக்களமு மான்மழுவும்
வரதமுட னபயமுறும்
மெய்க்கரமு நாற்புயமும்
விளங்குபணிக் கொடும் பூணுஞ்

செக்கருறு மதிச்சடையுஞ்
சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண
முன்னின்றே யருள் புரிந்தான்.

இப்படித் தியானித்து கொண்டு, சிவமூல மந்திரத்தை நூற்றெட்டுத் தரமும், தேவி மூலமந்திரம் கணபதி மூலமந்திரம் சுப்பிரமணிய மூலமந்திரம் என்னும் இவைகளைத் தனித்தனியே பத்துத் தரமுஞ் செபித்துப், பின்பு முன் போலக் குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமஞ் செய்து தோத்திரம் பண்ணுக.

## சிவதோத்திரம்

முடிகொண்ட மத்தமு முக்கண்ணி
னோக்கு முறுவலிப்புந்
துடி கொண்ட கையுந்துதைந்தவெண்
ணீறுஞ் சுரிகுழலாள்
படிகொண்ட பாகமும் பாய்புலித்
தோலுமென் பாவிநெஞ்சிற்
குடிகொண்ட வாதில்லை யம்பலக்
கூத்தன் குரைகழலே

**திருநாவுக்கரசு சுவாமிகள் 4ம் திருமுறை, கோயில் 7**

"கடையவ னேனைக்க ருணையி
னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன் எம்பி
ரானென்னைத் தாங்கிக் கொள்ளே"

**மாணிக்கவாசக சுவாமிகள் 8ம் திருமுறை, திருவாசகம் நீந்தல் விண்ணப்பம்–1**

"வேதநா யகனே போற்றி
விண்ணவர்தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி
மறுசம யங்கண்மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி
பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி

"சீராருஞ் சதுர்மறையுந்
தில்லைவா ழந்தணரும்

பாராரும் புலிமுனியுந்
பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல் புடைசூழ்
வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று
ளெடுத்ததிரு வடி போற்றி"

உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணம்–2

## தேவி தோத்திரம்

"பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றி னொளிவிளங்க
அரந்தை கெடப்புலியர்கோ
னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவாகம
சுந்தரிபூங் கழல்போற்றி"

உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணம் – 3

## விநாயகர் தோத்திரம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகுமா ழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

–விருத்தாசல புராணம்

## சுப்பிரமணியர் தோத்திரம்

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
யீராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

– கந்தபுராணம் பாயிரம் – 3

## சமய குரவர் நால்வர் தோத்திரம்

"பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி
லணைந்தபிரா னடி போற்றி
வாழிதிரு நாவலூர்
வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத
வூரர்திருத் தாள்போற்றி

–உமாபதிசிவம் சேக்கிழார் புராணம்

## அறுபத்துமூவர் தோத்திரம்

"தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ
முத்து மூரன் முகிழ்ந்த நிராமய
சித்து மூர்த்திதன் றாளிணை சேரறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்

–அருணாசல புராணம்

இப்படி தோத்திரம் பண்ணி எழுந்து

இந்திராய நம என்று கிழக்கிலும்
அக்நயே நம என்று தென்கிழக்கிலும்
யமாய நம என்று தெற்கிலும்
நிருதயே நம என்று தென்மேற்கிலும்
வருணாய நம என்று மேற்கிலும்
வாயுவே நம என்று வடமேற்கிலும்
குபேராய நம என்று வடக்கிலும்
ஈசாநாய நம உன்று வடகிழக்கிலுங் கும்பிட்டு

பார்வதீ சமேத பரமேசுவராய நம என்று வடக்கு நோக்கி மூன்று தரஞ் சாட்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து, ஆசமனஞ் செய்க.

அஸ்திராய படு என்று இருக்குமிடத்தைச் சலத்தினால் தெளித்து, அதனைத் தொட்டுக் கண்ணிலொற்றிக் கொண்டு சலத்தைத் தூரத்திலே கால்படா விடத்தில் விட்டு விடுக.

*அநுட்டான விதி முற்றிற்று.*

# திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

கருவினுருவாகி வந்து வயதளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்தும் அதனாலே
கரிய குழல் மாதர் தங்கள் அடிசுவடுவு மார்புதைந்து
கவலை பெரிதாகி நொந்து மிகவாடி
அரகரசிவாய வென்று தினமும் நினையாமல் நின்று
அறுசமய நீதி யொன்று மறியாமல்
அசனமிடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று

அனுதினமு ணாணமின்றி அழிவேனோ
உரகபடமேல் வளர்ந்த பெரிய பெருமாள் அரங்கர்
உலகளவு மால் மகிழ்ந்த மருகோனே
உபயகுலதீபதுங்க விருதுகவிராசசிங்க
உறைபுகலியூரிலன்று வருவோனே
பரவை மனைமீதிலன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர் சிறை மீளவென்று
பழனிமலை மீதினின்ற பெருமாளே.

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உதத்ம தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்





## வாழ்க்கை வரலாறு

நில வளம், நீர் வளம், கலைவளம் கல்விவளம் செல்வவளம் யாவும் ஒருங்கே அமையப் பெற்ற பதி அளவையம் பதியாகும். இப்பகுதியின் கண்ணே பல்வேறு மூர்த்திகளுக்குமுரிய சைவ ஆலயங்களும் கல்வி வளர்க்கும் செழுங்கலை நியமங்களும் மலிந்து பொலிந்து விளங்குகின்றன. காலம் தோறும் உலகப் புகழ்பெற்ற கலைமேதைகளும், கவிவாணர்களும் கல்வி மான்களும் ஞானிகளும் தோன்றிப் பெருமையைத் தேடித் தந்தனர். இவ்வாறு எல்லா வகையாலும் தன்னிறைவு கொண்ட அளவையம் பதியில் கார்காத்த சைவ வேளாண் உயர்குடி மரபிலே தோன்றிய கந்தவனம் என்னும் பெரியார் நாகம்மாவை வதுவை செய்து இனிதே இல்லறம் நடத்தி வந்தனர். இல்லற வாழ்வின் நல்லறப் பேறாய் முதல் ஒரு பெண்மகளையும் பின்பு இரண்டு ஆண்குழந்தைகளையும் பின்பு மூன்று பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்து சீராட்டி தாலாட்டி தென்னம் புளியடி என்ற நற்பெயர் கொண்ட குறிச்சியில் வாழ்ந்து வந்தார்கள். கந்தவனம் அவர் தம் குடும்பம் மூத்த மகளான இலட்சுமி அம்மாவை மிகவும் அன்புடன் இறையருளால் சீராட்டி வளர்த்து வந்தார்கள். இலட்சுமி அம்மாவின் சகோதரர்களாக அருளம்பலம், நித்தியானந்தன், புனிதவதி, திலகவதி, சுகுணவதி ஆகியோர் ஆவர்.

இலட்சுமி அம்மா அவர்கள் கல்விகற்று வரும் காலத்தில் அவ்வூரில் வாழ்ந்த அருணாசலம் விஸ்வநாதன் என்பவரை காதல் திருமணம் புரிந்தார். விஸ்வநாதன் அவர்கள் சிறுவயதிலே தாயை இழந்தமையால் இல்லாளை மிகவும் நேயத்துடன் ஆதரித்து வந்தார். அதே போன்று இலட்சுமி அம்மாவும் அவர் தம் பதியன் குடும்பத்தினரை மிகவும் பாசத்துடனும் அன்புடனும் பார்த்து வந்தார். இதனால் போலும் நல்லையா இவர் தம் மைத்துனரும் அண்ணியரை தனது தாய் போல நேசித்து வந்தார். இப்படியாக இருவரது இல்லற வாழ்க்கையில் கும்பளாவளை விநாயகரையும் கேணிக்கரை வைரவரையும் தமது குல தெய்வமாகக் கொண்டுவரும் காலத்தில் மூத்தமகளாக விக்னேஸ்வரியையும், இரண்டாவது மகளாக மங்கையற்கரசியும் பெண் குழந்தைகளைப் பெற்றனர். தமது குடும்பத்திற்கு ஆண் மகவு வேண்டும் என்று இறைவனை வேண்டி வழிபாடு ஆற்றியபலனாக ஓர் ஆண்மகவு பிறந்தது. அவரைத்

தொடர்ந்து நான்கு ஆண் குழந்தைகளைப் பெற்றனர். அவர்கள் முறையே சிவராஜசிங்கம், சிவானந்தராசா, சிவஞானசேகரம், சிவதாசன், சிவரூபன் ஆவர்கள். இவர்களை கண் இமை காப்பது போல கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார்கள்.

எமது தந்தையார், எமது தாயாரிடமே எல்லாவித பொறுப்புக்களையும் கொடுத்து விட்டு தனது முன்னேற்றத்திற்காக படிப்பில் சிரத்தை கொண்டார். அவர் தம் கல்விக்காக இலட்சுமி அம்மாவும் மிகுந்த அனுசரணையுடன் இருந்து தனது பிள்ளைகளையும் கணவரையும் சமுதாயத்தில் நல்ல நிலைக்கு உருவாக்கி வைத்தார். மூத்தமகள் பயிற்றப்பட்ட விஞ்ஞானப் ஆசிரியையாகவும், இரண்டாவது மகள் பயிற்றப்பட்ட கணித ஆசிரியையாகவும், மக்கள் கணக்காளரா கவும், படவரைஞராகவும், சங்கீத பூஷணமாகவும் (இசைப்பட்டதாரி அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), வங்கி உத்தியோகத்திலும் சமுதாயத்தில் நற்பிரஜைகளாகவும் உள்ளார்கள். அதே போல் தனது கணவரும் அளவை அருணோதயக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்திலேயே (London B.A) பரீட்சை எடுத்து முதலாவது பிரிவிலும், ஆங்கிலப் பாடத்திலும் (Maharagama Trd.) முதலாவது பிரிவிலும் சித்தியெய்தினார்.

இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் திரு. விஸ்வநாதன் அவர்கள் தனது முதுமை காரணமாக 2008ம் ஆண்டு தனது 92 வயதில் இறைபதம் ஏய்தினார். அதனைத் தொடர்ந்து அவர் தம் மனைவியும் பதியன் வழியே இறையருளின் துணையோடு தான் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் காலை 6 மணியளவில் தனது மூத்த மகளின் உதவியுடன் காலைக் கடன் முடித்து நீராடி அனுஸ்டானம் பார்த்து திருமுறைகள் பாடி தனது வாழ்நாளை ஓட்டினார். அன்று மாலை 9 மணியளவில் ரேவதி நட்சத்திரமும், ஏகாதசி திதியும் கூடிய நாளில் தனது பூதவுடலை விட்டு அவரது ஆன்மா சிவபதம் எய்தினார். அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல கும்பளாவளை அப்பனின் அருளால் பரமனடி சேரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**சாந்தி சாந்தி சாந்தி**

உ
சிவமயம்

பிரம்மஸ்ரீ. சண்முகரத்தின சர்மா
ஸ்ரீபால செல்வ விநாயக மூர்த்தி கோவில்
பிரதம குருக்கள் - சமாதான நீதவான்
சிவாகம திலகம் - சிவகாம பூஷணம்
தலைவர் - ஸ்ரீ ராம கான சபா
தலைவர் - அகில இலங்கை சிவப் பிராமண சங்கம்
11/9, கப்பித்தாவத்தை, கொழும்பு - 10
தொலைபேசி கோயில் : 2687111
வீடு : 2693922

*Brahmmoshri B. Shanmugaratna Sarma*
*Sri Bala Selva Vinayaga Moorthy Temple*
Chief Priest - Justice of the Peace
Sivakama Thilagam - Sivakama Bhooshanam
President : Shri Rama GanaSabha
President : All Ceylon Siva Brahmana Sabha
11/9, Captain's Garden, Colombo-10.
Telephone Temple : 2687111
Residence : 2693922

# அனுதாபச் செய்தி

அளவெட்டியில் அருணாசலம் விஸ்வநாதன் குடும்பம் சீரும் சிறப்பாக வாழ்ந்து வந்தனர். நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக கொழும்பில் ஏறத்தாள 15 வருடங்களாக தனது மகன்மாருடன் வாழ்ந்து வந்தார் அண்மையில் சிவபதம் அடைந்த இலட்சுமியம்மா கொழும்பில் இருக்கும் காலத்தில் எமது ஆலயத்திற்கு அதிகாலைப் பூஜை 5.00 மணிக்கு நடைபெறுவதற்கு முன்பே தன்னால் இயன்ற பூக்களையும் கொண்டு சமய ஆசாரத்துடன் தினமும் வருவார். அத்துடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் பூசைகளிலும் விழாக்களிலும் கலந்து கொள்ளுவார். அதேபோன்றே அயலில் இருக்கும் ஸ்ரீ கருணா கடாச்சி அம்பாள் சமேத கைலாச நாரதரையும் வணங்குவார். தனது வயோதிபக் காலத்தில் இப்படிப்பட்ட வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு எல்லோருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. இவர் செய்த புண்ணியமே இப்படி அமைந்தது. ஆசிரியர் அவர்களுடைய குடும்பத்தவர்கள் எனது குடும்பத்தினருடனும் குடும்ப நண்பர்கள் ஆவார்கள்.

ஆசிரியரைப்போன்றே அவர்தம் மனைவி பிள்ளைகள் சைவசமய ஆசார சீலர்கள் அதிலும் இலட்சுமி அம்மா சமய அறிவு, சமூக அறிவு, செயல்திறன், எந்த விடயத்தை எடுத்தாலும் அதனை சரிவர செய்ய வேண்டும் என்ற மனத்திடம் மிக்கவர். தனது வேலைகளை முடித்து விட்டு நேரம் கிடைக்கும் போது திருவாசகம் கருடபுராணம், திருமுறைகள் முணுமுணுத்த படியே இருப்பார்கள்.

தனது குடும்பத்தில் கணவனது முன்னேற்றத்திற்கும், பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கும் மிகுந்த அனுசரணையுடன் வெற்றி என்பதனை குறிக்கோளாகக் கொண்டு இறைபக்தியுடன்

ஜெபம் கொள்ளுவார். அவரின் பதியின் வழியிற் சமூகப்பணி, சமயப்பணி என்பவற்றை அசையாத நம்பிக்கையுடன் செய்து வந்தவர். இவரின் தந்தையார் மிகுந்த கமக்காரன் அவர்களும் சித்தர், யோகர் குழந்தைவேல் சாமி அருளம்பலசாமி அருள் பெற்றவர். அதுவும் இலட்சுமி அம்மாவிற்கு கிடைத்த ஒரு பாக்கியமே.

நாட்டின் நிலமை சீராக வரவும் தனது சொந்த ஊரான அளவெட்டிக்குச் சென்று கணவன் மக்கள் உடன் வாழ்ந்து வந்தார். தனது முதுமைக் காலத்திலும் மகள் இளைப்பாறி ஆசிரியை விக்னேஸ்வரி கந்தையாவின் உதவியால் அதிகாலை தனது காலைக்கடன் முடித்து, நீராடி அனுட்டானம் முடித்து பின்பே தேனீர் அருந்தினார்.

சில நாள் முதுமை காரணமாக நோய்வாய்ப்பட்டி ருந்தார். தனது ஐயா வந்து தன்னை அழைத்துச் செல்வார் என்று கூறிய படி ஆடிக்கொண்டர் அந்த வேடிக்கை காணகண் ஆயிரம் வேண்டும் என்று கீர்த்தனை பாடுவார்.

அன்று திங்கள்கிழமை மாலை 9.00 மணியளவில் திருமதி இலட்சுமி அம்மா ரேவதி நட்சத்திரம் ஏகாதசி திதியும் கூடிய நாளில் இறைபதம் அடைந்தார் என்னும் செய்தி தொலைபேசி மூலம் அறிந்தேன். தனது ஆழ்ந்த அனுதாபத்தை அவர் தம் குடும்பத்தினருக்குத் தெரிவித்து இறைவனைப் பிரார்த்தித்தேன்.

அவர் தம் ஆத்மா எல்லாம் வல்ல ஸ்ரீபால செல்வவிநாயகரின் பாராதவிந்தங்களில் சேரும் என்பதனை பிரார்த்தித்து அவர் தம் குடும்பத்தினருக்கு அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

உ

# அளவெட்டி கும்பழாவளை திருவாட்டி இலட்சுமி அம்மா விஸ்வநாதன் (பறுவதம்) அவர்களின் மறைவிற்கான அஞ்சலி உரை

அளவெட்டி கும்பழாவளை மண்ணில் வாழ்ந்த கற்றறிந்த ஆழ்ந்தோர்கள் மத்தியில் மதிப்பும் பண்பும் மிக்க ஒருவர் தான் திருவாட்டி விஸ்வநாதன் பறுவதம் அவர்கள். அன்னார் கும்பழாவளை விநாயகர் மீது அளவற்ற இறைபற்றுடையவர். ஆலயத்தில் நடைபெறும் விழாக்களுக்கு வந்து தரிசித்து இறையருளைப் பெற்ற மூதாட்டிகளுள் முதன்மையானவர்.

மனைத்தக்க மாண்புடையளாகி அவரது இல்லம் நாடிச் செல்வோரை அன்போடும் பண்போடும் வரவேற்று விருந்தோம்பல் செய்யும் நற்பெருந்தகை. இவரது பிரிவு அளவெட்டி கும்பழாவளை மண்ணிற்குப் பேரிழப்பு என்பது உண்மை. அன்னாரை பிரிந்து துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருடைய ஆத்மா கும்பழாவளையான் திருப்பாதத்தில் ஆனந்தப் பெருவாழ்வு பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**சிவஸ்ரீ இராமலிங்க சூரியப் பிரபாகரக் குருக்கள்**
கும்பழாவளை பிள்ளையார் கோவில், அளவெட்டி,

பிரதம சிவாச்சாரியார், ஸ்ரீ செண்பக விநாயகர் தேவஸ்தானம், சிங்கப்பூர்.

## என் அன்பின் அம்மாவிற்கு மூத்த புதல்வி விக்கி (திருமதி. கந்தையா விக்னேஸ்வரி) எழுதும் மடல்

You may be able to pay back any debt
but the debt you owe your mother
you never can repay

*Sathiya Sai Baba*

"காசிருந்தால் எல்லாவற்றையும் வாங்கலாம் அம்மாவை வாங்க முடியாதே!"

எனது அம்மா உண்மையில் ஒரு இலட்சுமி அம்மாதான். பிறந்த வீட்டிற்கும் இலட்சுமி புகுந்த வீட்டிற்கும் இலட்சுமி. அத்திவாரம் இல்லா வாழ்க்கையின் ஆரம்பம். இருப்பினும் இருவரினதும் விடாமுயற்சியும் ஒத்துழைப்பும் எதையும் தாங்கும் இதயமும் அவர்களை வாழ்க்கையின் உச்சிப்படியில் உயர்த்தி வைத்தது. கும்பழாவளைப் பிள்ளையாரின் திருவருட் பார்வை நிறையப் பெற்றமை இவை எல்லாவற்றுக்கும் மூல காரணம். மனம் சலிக்காது எல்லாவிதமான வேலைகளையும் செய்பவர். சமய அனுட்டானங்கள் நிரம்பப் பெற்றவர். முதுமையிலும் இடைவிடாது அதிகாலை குளித்து தோய்த்த வஸ்திரம் தரித்து நெற்றி நிறைய திருநீற்றுப் பூச்சுடன் காணப்படுபவர். ஆவிபிரிந்த பின்னரும் இன்முகத்தோடும் புன் சிரிப்புடனும் காணப்பட்டார்.

மூத்த பிள்ளை என்பதனால் எம்மை வளர்த்து ஆளாக்க அவர்கள் பட்டபாடு என் உடன்பிறப்புக்களைக் காட்டிலும் நன்கு அறிந்திருந்தேன் பார்த்திருந்தேன்.

முதுமைப் பருவம் எவ்வித இடையூறுமின்றி வாழ இறைவன் என்னை அவர்களுக்குப் பணிவிடை செய்ய அனுப்பி வைத்து விட்டான் போலும் கணவன் இல்லாதநிலை மக்கட் பேறு இல்லாத ஒரு புத்திரி அவர்கட்கும் கிடைத்த பெரும் பேறு உண்மையில் இருவரும் கொடுத்து வைத்தவர்களே!

அம்மாவின் ஆன்மா இறைவனின் திருப்பாதங்களில் சாந்தி பெறப் பிரார்த்திக்கும்

அன்பின் மூத்த புதல்வி
**திருமதி. கந்தையா விக்னேஸ்வரி**

உ
சிவமயம்
ஸ்ரீராமஜெயம்

## மாதர் குலத்து மாணிக்க திலகம்

*பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை உண் டாகபெறின்*

அன்பே உருவாய் தமிழே பெருமையாய் சைவபுனிதம் காத்து தமிழ் வளர்த்து, முத்தமிழ்ச் சங்ககாலம் தொட்டு வளர்ந்து வாழ்ந்த மாதர் குலதெய்வீக பெண்கள் வரிசையில் பாண்டி மாதேவி திலகவதியார் காரைக்கால் அம்மையார் வரிசையில் தோன்றிய சீமாட்டி இலட்சுமி அம்மா (பறுவதம்) செல்லப்பெயர் தற்காத்து தற்கொண்டாற் பேணின் தகைசான்ற சொற்காத்து சோர் விலாள் பெண். உயர் தெய்வீக சிவதத்துவ புராண வள்ளல், விசுவநாத பெருந்தகையின் இல்லத்து அரசியாக வாழ்ந்து, அரும் பெரும் சந்தான கடமைகள் ஆற்றி, தமிழ் பண்பு சமய பண்பு தெய்வீக பண்பு உற்றார் உறவினர் பண்பு விருந்தோம்பல் பண்பு முதலிய சிறப்பு சிந்தனை இல்வாழ்வு கடமைகளை மனவலிமையோடு ஆற்றி வாழ்ந்த சீமாட்டி.

கும்பழாவளை விநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படிப்பு பயன்படிக்கும் காலங்களில் தினமும் தவறாது சிவசின்னம் அணிந்து தீட்சை ஒருங்கே கைவரப் பெற்ற தெய்வீக திருமேனியுடன் புராணபயன் கதைகளை சிந்தனைத் திறனோடு கேட்டு உள்ளத்தால் மகிழ்ந்து தான் கேட்டவற்றை கண்ணீர் மல்க கற்கண்டு ஆச்சி பொன்னம்மா அக்கா அவர்களோடு விளங்கி இன்புற்ற பெருமை யாரும் மறக்கமாட்டார்கள்.

திருவிழா மகோற்சவ காலங்களில் தனது இல்லம் தேடி வரும் பெரியார்கள் சைவப் பெரியார்கள் கல்விமாந்தர்கள், சிவனடியார்கள் இவர்களை அன்பு நிறைந்த உவகையோடு வரவேற்று விருந்தோம்பல் செய்வதில் திறமை வாய்ந்தவர். மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளை கண்ணால் கண்டவுடன் தேன்சொரியும். தனது பிள்ளைகளில் கல்விமேம்பாடு அபிவிருத்தியில் விஷேட திறமை நல்வழிப்படுத்தும் கல்வியில் சிறந்த அறிஞர்களாக வர அயராது உழைத்தவர்.

தனது குடும்பத்திற் பேரொளி விருட்சமாக அவதரித்து எல்லோர்க்கும் நற்கருமங்களை ஆற்றி சிவப்பொலிவு காட்டி அமரத்துவம் அடைந்தார். ஆசிரிய உலகம் என்றென்றும் வாழ்த்தும், தெய்வீகசிவப் பொலிவு கிடைத்து மகிழ்வார்.

சுபம்

அன்பு மருமகன்,
**ஐ. சிவநேசன்**

# *Our dearest Aunty*

Our dearest Lokku Aunty you were called Luxmy since you were pleasant and persevering you have gained the ludicrous life from an empty foundation of your marriage life where you both have started your loving and joyful life which is actually appreciable you have brought up your own children to the height of sky in all their kindness, hospitality, education and fantastic family life and with a wonderful eldest daughter who has sacrificed her life to your fond with so much responsibility and to her humbly understanding gentleman you are actually a great Aunty where you were far away from me when I was a girl but in my 30's I felt missed a lot without your love and affection from my childhood with an unvaluable Dad who was petted and given a lovely place for him in your circle.

We are lucky to have our loving eldest cousin Vicky Matchal and other affectionate cousins where we had an excellent Mangai Akka who is really very lovable and gentle who was petted so much by uncle Viswanathan learned highly respectable great man who helped in my project actually we convey our deepest sympathies through our darling Vicky Matchal to all of your children and granies we regret for not attending together of the funeral day with all my sithyes who should have realized the sister and brothers relationship where they both have gone together it shows the real love and affection we are really proud to have an aunt and dad with so much affection and love which is very much felt by us and touched by our hearts where we were born in a loving family which is very rare in the world.

May your soul rest in peace at the foot of God.

**Nithy Mama's Eldest Daughter**
**Mohan on behalf of Nithy Mamas family**

## பேரனின் சில நினைவுகள்

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"*

இலட்சுமியம்மா என்னும் பெயருக்கேற்றதாக அமரர் திரு. விஸ்வநாதன் அவர்களுக்கு தாயையிழந்து தவித்த குடும்பத்துக்கு தாயாக வந்து நின்று தந்தையையும் தம்பியையும் அரவணைத்தும் வீட்டின் ஒளிவிளக்காக அமைந்தும் இல்லற வாழ்வில் உற்றதுணையாக அமைத்தும் தனது புதல்வர்கள் புதல்விகளின் முன்னேற்றத்துக்கு அல்லும் பகலுமாக தனது உடல் நலம் பாராது தனது முதுமை பருவம் வரை உழைத்து வாழ்வில் உளமகிழ்ந்து வாழ்ந்து வந்தவர். தன்னுடைய தள்ளாத வயதிலும் தினந்தோறும் காலை வேளையில் நீராடி நெற்றிமுதல் மேனியெங்கும் சுந்தரத் திருநீற்றின் ஒளிவிளங்க இலட்சுமிகரமாக தோற்றமளிப்பார்.

என்னையும் தனது மூத்த பேரனாக கொண்டு மழலை குழந்தை பருவத்தில் இருந்து அன்னையை போல நீராட்டி ஆகாரம். ஊட்டி வளர்த்தவர். குழந்தையில் நீராட்டிய பின் மேனியை பவுடர் பூசி அழகுப்படுத்தும் போது நான் மகிழ்ச்சியில் காலினால் தனது பற்களில் உதைத்தனால் தான் தனது முன் பற்களை இழந்தேன். என்று தினந்தோறும் வருபவர்களுக்கும் கூட கூறி அதிலும் சந்தோஷத்தை அனுபவிப்பார். சில வேளைகளில் கூட என்னைக் காணாது விடினும் எங்களுடைய திரு பெடியனைக் காணவில்லை என்று கவலையுடன் கூறுவார். தன்னுடைய இறுதிக காலத்திலும் நகைச்சுவையாக கதைகளைக் கூறி எல்லோரையும் சிரிக்க வைத்து தானும் சந்தோஷமடைவார். அம்மம்மா என்று கூறுவதற்கு பேரனாக இருந்து எம்மை விட்டு பிரிந்த நினைவுத் துயர் என்றுமே மாறமாட்டது.

இப்படிக்கு,
உங்கள் அன்புப் பேரன்,
**சி. திருவனந்தன்.**

## எங்கள் அன்பு அப்பம்மாவிற்கு
## சமர்ப்பணம் !!!

பேரப்பிள்ளைகள் நாம் நற்பண்புடனும்

ஒழுக்கத்துடனும் வாழ வழிகாட்டினீர்கள்!

சைவ ஆகமங்களையும் வழிமுறைகளையும்

முறையாகப் பின்பற்றி உயர் சைவ வழித்தோன்றல்

என்பதை பறைசாற்றினீர்கள்!

அறியாப் பருவத்தில் நாம் செய்த தவறுகளையும்

சில்மிஷங்களையும் பார்த்துப் பார்த்து ரசித்தீர்கள்!

குறும்புத்தனமான குழந்தைகள்தான் புத்திசாதுரியமானவர்களாய்

எதிர்காலத்தில் வருவார்கள்என்று கூறி பெருமிதம் கொண்டீர்கள்!

வாழ்க்கைப் பாடங்களை கற்றுத் தெளிந்து

வாழ்வில் உயர இலக்கணம் எடுத்துரைத்தீர்கள்!

"அப்பம்மா" என்று கூறினால் போதும் பாசத்தை

அள்ளித்தெளித்து பாசத்தின் ஒளிவிளக்கானீர்கள்!

எமக்காகவே வாழ்ந்து எம் உயர்வுக்காய்

அரும்பாடுபட்டு எமக்காகவே உங்கள் வாழ்வை அர்ப்பணித்தீர்கள்!

மற்றவர்களுக்கு உதவும் உயரிய பண்பை

எம் மனங்களில் விதைத்து விட்டீர்கள்!

ஏழேழு ஜென்மத்திலும் உங்கள் பேரக்குழந்தைகளாக

உங்கள் மடியில் தவழ்ந்து மகிழ வேண்டிநிற்கிறோம்!

அன்பிலும் பண்பு பண்பாட்டிலும் உயர்ந்து

இன்று இறை விம்பமாய் மிளிர்கிறீர்கள்!

உங்கள் பேரப்பிள்ளைகளாக என்றும் வாழ்வில்

உயர்ந்து நின்று உங்கள் பெயர் போற்றுவோம்!

என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காய்

பிரார்த்திக்கும்

**உங்கள் அன்புப் பேரப்பிள்ளைகள்**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி...!

## எமது ஆசை அப்பம்மா

எங்களுக்கு நல்ல அறிவுரைகள் கூறி எம்மை வழிநடத்துவீர்களே ஆசையாக எங்களை ஆலயம் அழைத்துச் செல்வீர்களே நாம் ஆசையாக நாடியைத் தடவி அன்பாய் அப்பம்மா என அழைப்போம். இனியாரை நாம் அவ்வாறு அழைப்போம். உங்கள் பிரிவை எண்ணி ஏங்கி நிற்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி வேண்டி இறைவனை வேண்டி நிற்கும்.

**பேரப்பிள்ளைகள்**

உ

# நன்றி நவிலல்



எங்கள் இதயத் தெய்வத்தின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்து மலர்தூவி மலரஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உள்ளூர் வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பிவைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், உள்ளூர் வெளிநாடுகளில் எமதெமது இல்லங்கள் வந்து அனுதாபங்கள் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், ஈமக்கிரியைகளின் போதும் அதைத் தொடர்ந்தும் பல்வேறு வழிகளில் உதவி நல்கியவர்களுக்கும் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் சகல கிரியைகளையும் நடாத்தி வைத்த அந்தணப் பெரியோர்களுக்கும், கிரியைகளின் போது பரமன் புகழ் பாடியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் இலட்சுமி தீபம் மலர் வெளியிடுவதற்கு சிறந்த முறையில் மிகவும் குறுகிய நேரத்தில் இதனை வடிவமைத்துத் தந்த யுனி ஆர்ட்ஸ் அச்சகத்தினருக்கும் எமது ஆற்றொணாத் துயர மத்தியில் நாவெழா நிலையில் பணிவுடன் நன்றி நவில்கின்றோம்

*நன்றி!*

***–குடும்பத்தினர்.***

# வம்ச விரு

கந்தவனம்
+
நாகம்மா

**இலட்சுமி அம்மா**

௨ அருளம்பலம்
+
இரத்தினேஸ்வரி

௨ நித்தியானந்தம்
+
௨ கிரியாயசக்தி

௨ புனிதவதி
+

திலகவதி
+
௨ குணரத்தின

விக்கினேஸ்வரி
+
௨ கந்தையா

மங்கையற்கரசி
+
சிவநேசன்

திருவனந்தன்

சிவராஜசிங்கம்
+
செல்வநாயகி

௨ சிவானந்தராஜா
+
மனோராணி

நவனீதன்
நந்தகுமரன்

சிவதாசன்
+
கோமதி

அக்ஷயன்

சிவதர்ஷிணி
+
சிவலிங்கதாசன்

நிஷா
சுஜா

சிவதர்மினி

கபிலன்

௨ அமரர்

# வம்ச விருட்சம்

அருணாசலம்
+
பொன்னு

திலகவதி
+
உ குணரத்தினம்

சுகுணாவதி
+
சிவசிதம்பரம்

உ ஆச்சிமுத்து
+
உ சுப்பிரமணியம்

உ **விஸ்வநாதன்**

உ சரவணமுத்து
+
உ செல்வராணி

சிவானந்தராஜா
+
மனோராணி

நவனீதன்
நந்தகுமரன்

கபிலன்

சிவாஞானசேகரம்
+
சிவயோகராணி

தர்சிலா + சிவராம்

நிக்சலா
கலைவாணி

உ சிவதாசன்

சிவரூபன்
+
ஆதிரை

சிவனுஜன்
பிரணவி

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்!

''இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.